




நல்லவே எண்ணல் வேண்டும்... எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 42 | 08.08.2025 | FRIDAY | AADI : 22 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 42 | 08.08.2025 | வெள்ளிக்கிழமை | ஆடி : 22 | விலை : ரூ.5/- |



3 திருப்பூர் உயிரிழந்த உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு தமிழக முதல்வர் 1 கோடி நிவாரணம் அறிவிப்பு

4 விவசாயிகள் நலனுக்காக எந்த விலையும் கொடுக்கத் தயார்' ட்ரம்பின் வரித் தாக்குதலுக்கு மோடி பதிலடி

2 பாமகவில் உள்ளவர்களிடம் பணத்தை கொடுத்து எனக்கு எதிராக செயல்பட தூண்டுகிறார் அன்புமணி: ராமதாஸ் பேட்டி


# கருணாநிதியின் 7ம் ஆண்டு நினைவு தினம்: முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி

சென்னை: ஆக.8-

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 7ம் ஆண்டு நினைவுதினத்தையொட்டி, தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது.

திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதி, கடந்த 2018ம் ஆண்டு ஆக.7ம் தேதி வயது மூப்பு காரணமாக மறைந்தார். அவரது 7ம் ஆண்டு நினைவுதினம் நேற்று தமிழகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

இதன் பகுதியாக திமுக சென்னை மாவட்டம் சார்பில் சென்னை அண்ணாசாலையில் அமைதிப் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பேரணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்தார். அவர், ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலையின் கீழ் வைக்கப்பட்டிருந்த உருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் திமுக பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன், துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி., உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியதைத் தொடர்ந்து பேரணி தொடங்கியது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்செல்ல அவரது பின்னால் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என திரளானோர் கருணாநிதியின் புகைப்படம் ஏந்திய



பதாகை உள்ளிட்டவற்றை ஏந்தியபடி சென்றனர்.

பேரணியானது, மெரினா நினைவிடத்தில் நிறைவு பெற்றது. அங்குள்ள முன்னாள் முதல்வர் மறைந்த அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோரின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தும், மலர் தூவியும் முதல்வர் அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்வில், கே.என்.நேரு, எ.வ.வேலு, ஐ.பெரியசாமி, மா.சுப்பிரமணியன், சேகர்பாபு உள்ளிட்ட அமைச்சர்கள், டி.ஆர். பாலு, ஆ.ராசா, தயாநிதி மாறன் உள்ளிட்ட எம்.பி.,க்கள், சுதர்சனம், தாயகம் கவி உள்ளிட்ட எம்எல்ஏக்கள், முன்னாள் அமைச்சர் பொன்முடி, தமிழ்நாடு வீட்டு வசதிவாரியத் தலைவர் பூச்சி முருகன், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கருணாநிதியின் நினைவுதினத்தையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது: திமுக தலைவர் கலைஞர் முத்துவேலரும் அஞ்சுகம் அம்மையாரும் பூமிக்குத் தந்த பிறப்பு. பெரியாரும் முன்னாள் முதல்வர் அண்ணாதுரையும் தமிழினத்துக்குத் தந்த நெருப்பு. அவரது சாதனைகளால் சிறப்பு பெற்ற தமிழகத்தைக் காத்து முன்னேற்ற உறுதியேற்று, அவரது ஒளியில் "எல்லார்க்கும் எல்லாம்" ஞ "எதிலும் தமிழகம் முதலிடம்" எனும் இலக்கை நோக்கி வெற்றிப்பாதையில் நடைபோடுவோம். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## மாணவர் கொலை வழக்கில் திமுக கவுன்சிலர் பேரனின் ஜாமீன் மனு தள்ளுபடி

சென்னை: ஆக.8-

அயனாவரத்தில் கார் மோதி கல்லூரி மாணவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் மாநகராட்சி திமுக கவுன்சிலர் தனசேகரனின் பேரன் தாக்கல் செய்திருந்த ஜாமீன் மனுவை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.



சென்னை அயனாவரம் சுரேஷ் என்பவரது மகன் நிதின்சாய் (19). மயிலாப்பூரில் உள்ள கல்லூரி ஒன்றில் பி.ஏ முதலாமாண்டு படித்து வந்தார். கடந்த ஜூலை 29 அன்று தனது கல்லூரி நண்பர்களுடன் அண்ணாநகரில் உணவருந்தச் சென்றார்.

காதல் பிரச்சினை: இதற்கிடையே நிதின்சாயும், அவரது நண்பர் அபிஷேக்கும் சென்ற இருசக்கர வாகனம் மீது காரை மோதியதில், நிதின்சாய் படுகாயமடைந்து இறந்தார். அபிஷேக் மருத்துவ சிகிச்சையில் உள்ளார். காதல் பிரச்சினையில் இந்த சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் நிதின்சாயை கொலை செய்ததாக கே.கே.நகர் பகுதியைச் சேர்ந்த திமுக மாநகராட்சி கவுன்சிலரான தனசேகரனின் பேரனான சந்துரு, அவரது நண்பர் பிரணவ் உள்ளிட்டோரை திருமங்கலம் போலீஸார் கைது செய்தனர். இந்த வழக்கில் தனக்கு ஜாமீன் கோரி சந்துரு, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்பாக நடந்தது.

அரசு தரப்பு ஆட்சேபம்: அப்போது மனுதாரருக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என மாநகர அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஜி.தேவராஜன் ஆட்சேபம் தெரிவித்தார். அதையடுத்து ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.


## கார்மென்ட் யூனிட் லீசுக்கு

திருப்பூர் அவிநாசி ரோடு அம்மாபாளையம் அருகில் 32 மிஷினுடன் 3000 Sqt உள்ள கார்மென்ட் யூனிட் லீசுக்கு உள்ளது.

அணுகவும்

91592 31488


## தமிழகத்தில் என்டிஏ ஆட்சியை பிடிப்பது உறுதி: பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் நம்பிக்கை

சிவகாசி / சாத்தூர்: ஆக.8-

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியைப் பிடிப்பது உறுதி என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் நேற்று நடைபெற்ற பாஜக பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற நயினார் நாகேந்திரன் பேசியதாவது: வரும் 17ம் தேதி நெல்லையில் நடைபெறும் மண்டல பூத் கமிட்டி நிர்வாகிகள் மாநாட்



டில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகிய மூவரில், யாராவது ஒருவர் கலந்து கொள்வார்.

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிக்கு பாஜகவினர் சிறப்பாக பணியாற்ற வேண்டும். 2029ல் அதிக பாஜக எம்.பி.க்களை தமிழகத்தில் இருந்து மக்களவைக்கு அனுப்புவதே நமது இலக்கு. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியைப் பிடிப்பது உறுதி. இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு மோசமான நிலையில் உள்ளது. ஆனால், இதைப் பற்றி கவலைப்படாமல் முதல்வர் 'ஓரணியில் தமிழ்நாடு' என்றும், ஆட்சியைப் பிடிப்போம் என்றும் பேசி வருகிறார்" என்றார்.

அதேபோல், சாத்தூரில் செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறும்போது, "சாதியக் கொலைகளை தடுக்க தனி சட்டம் கொண்டுவர வேண்டும். அரசு மருத்துவமனைகளில் பாம்பு கடி, நாய்க்கடிக்கு மருந்து இல்லை என்று கூறுகிறார்கள்" என்றார்.

## உடுமலையில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் படுகொலை: அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம்

சென்னை: ஆக.8-

திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்த குடிமங்கலம் பகுதியில் விசாரணைக்கு சென்ற காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளதற்கு, அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை:



மத்திய இணையமைச்சர் எல்.முருகன்: தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதற்கு இச்சம்பவம் உதாரணம். காவல் துறையினருக்கே பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது. காவல் துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டம் ஒழுங்கை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி: தமிழகத்தில் காவல் துறையினருக்கே பாதுகாப்பு இல்லை. இந்த வழக்கில் முறையான விசாரணை நடத்தவும், குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் திமுக அரசு முன்வர வேண்டும்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்: அனைத்துப் பிரிவினரையும் அவதிக்குள்ளாக்கும் திமுக ஆட்சி எப்போது முடியும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் இந்த எதிர்பார்ப்பு நிறைவேறும்.

பாமக தலைவர் அன்புமணி: காவல் துறை முதல்வரின் கட்டுப்பாட்டில் இல்லை. சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தி, மக்களிடம் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தத் தவறியதற்காக மக்களிடம் முதல்வர் ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும். இதேபோல, தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் உள்ளிட்டோரும் கண்டனம் தெரிவித்து உள்ளனர்.

## கருணாநிதி நினைவு தினம்: புதுச்சேரி முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் மரியாதை

புதுச்சேரி: ஆக.8-

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நினைவு தினத்தையொட்டி புதுச்சேரி அரசு சார்பில் அவரது திருவுருவப் படத்திற்கு முதல்வர் ரங்கசாமி, அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 7ம் ஆண்டு நினைவு தினம் இன்று புதுச்சேரி அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. இதற்காக கடற்கரை சாலையில் உள்ள மேரி ஹாலில் அலங்கரித்து



வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் திருவுருவப் படத்துக்கு முதல்வர் ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் செல்வம், அமைச்சர் லட்சுமி நாராயணன், பேரவை துணைத் தலைவர் ராஜவேலு, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா, அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம், என்.ஆர். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பாஸ்கரன், திமுக உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில் குமார், சம்பத், திமுக அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார் உள்ளிட்ட பலரும் பங்கேற்று மலரஞ்சலி செலுத்தினர்.

திமுகவினர் அமைதி பேரணி: கருணாநிதி 7ம் ஆண்டு நினைவு தினத்தையெபட்டி புதுச்சேரி மாநில திமுக சார்பில், புதுச்சேரி சுதேசி மில் அருகில் மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சிவா தலைமையில் திமுகஞ வினர் ஒன்றிணைந்து அமைதிப் பேரணியாக புறப்பட்டனர்.

அவர்கள் பேரணியாக சென்று அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதேபோல், புதுச்சேரியில் உள்ள 23 தொகுதிகளில் அந்தந்த தொகுதி கழகம் சார்பில், கருணாநிதியின் படம் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

# ஆயுள் தண்டனை கைதி பாபா ராம் ரஹீமுக்கு மீண்டும் பரோல்: 8 ஆண்டுகளில் 375 நாள் சிறையிலிருந்து வெளியே வந்ததால் சர்ச்சை

புதுடெல்லி, ஆக.08-



பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் குர்மீத் சிங் எனும் பாபா ராம் ரஹீமுக்கு மீண்டும் 40 நாள் பரோல் கிடைத்துள்ளது. இவர் கடந்த 8 வருடங்களில் 375 நாள் வெளியில் வந்து சென்றது சர்ச்சைக்குள்ளாகி வருகிறது.

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் பிரபல துறவியாக இருப்பவர் குர்மீத் சிங் எனும் பாபா ராம் ரஹீம். இவர் தனது டேரா சச்சா சவுதா மடத்தின் ஹரியானா ஆசிரமத்தில் 2 இளம் பெண் சீடர்களை பாலியல் வன்கொடுமை செய்ததாக வழக்குப் பதிவானது. இதில் ராம் ரஹீம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, கடந்த 2017ல் 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. பிறகு 2019ல் பத்திரிகையாளர் ராமச்சந்திர சத்ரபதி கொலை வழக்கில் இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஹரியானாவின் ரோத்தக், சுனரியா சிறையில், 2017 முதல் பாபா ராம் ரஹீம் இருந்து வருகிறார். இவருக்கு நேற்று முன்தினம் மீண்டும் 40 நாள் பரோல் கிடைத்துள்ளது. கடந்த 3 மாதங்களில் இவர் பரோலில் வருவது இது 2வது முறையாகும். மேலும் 8 ஆண்டு சிறை வாழ்க்கையில் இவர் இதுவரை 18 முறை பரோல் பெற்றது சர்ச்சையாகி வருகிறது. 18 முறை பரோல் காரணமாக இவர் ஒரு வருடத்துக்கும் மேலாக சிறைக்கு வெளியில் இருந்துள்ளார்.

இவருக்கு தொடக்கத்தில் 5 ஆண்டுகள் வரை மற்ற கைதிகளை போல ஒன்று அல்லது இரண்டு முறை பரோல் கிடைத்தது. ஆனால் ஹரியானா அரசு மேற்கொண்ட சட்டத்திருத்தம் காரணமாக 2022, பிப்ரவரி 7 முதல் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 91 நாட்கள் பரோல் கிடைத்து வருகிறது. ஹரியானாவில் இவரை போல ஆயுள் தண்டனை கைதிகள் 2,824 பேர் உள்ளனர். ஆனால் அவர்களில் பெரும்பாலானோருக்கு, ராம் ரஹீமை போல் இவ்வளவு பரோல்கள் கிடைப்பதில்லை எனப் புகார் நிலவுகிறது.

குஜராத்தின் பில்கிஸ் பானு வழக்கை தவிர்த்து, பாபா ராம் ரஹீமுக்கு கிடைத்த பரோல், மிகப் பெரிய சாதனையாக கருதப்படுகிறது. கடந்த 2022 டிசம்பரில் உச்ச நீதிமன்றத்தில் பில்கிஸ் பானு பிரமாணப் பத்திரம் அளித்திருந்தார். அதில், தனக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட 11 பேரில், 10 பேர் தண்டனை பெற்ற பிறகு ஆயிரம் நாட்கள் பரோல் மற்றும் விடுமுறை எடுத்துள்ளதாக கூறியிருந்தார்.

ஆயுத வழக்கில் சிக்கிய பாலிவுட் நட்சத்திரம் சஞ்சய் தத், ஜெஸிகா லால் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற மனு சர்மா ஆகியோரும் பரோல்கள் பெற்றதில் சர்ச்சையில் சிக்கினர்.

# பாமகவில் உள்ளவர்களிடம் பணத்தை கொடுத்து எனக்கு எதிராக செயல்பட தூண்டுகிறார் அன்புமணி: ராமதாஸ் பேட்டி

சென்னை, ஆக.08-

பாமகவில் உள்ளவர்களிடம் பணத்தை கொடுத்து எனக்கு எதிராக செயல்பட தூண்டுகிறார் அன்புமணி என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். பாமகவில் ராமதாஸ் மற்றும் அன்புமணி இடையிலான மோதல் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது. அந்த வகையில் கட்சியின் பொதுக்குழு கூட்டம் ஆக., 17 ல் நடக்கும் என ராமதாஸ் அறிவித்துள்ளார். போட்டிக்கு, ஆக.,09ல் பொதுக்குழு கூட்டம் நடக்கும் என அன்புமணி தரப்பும் அறிவித்துள்ளது. இது அக்கட்சியினர் இடையே குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் அன்புமணி கட்சியை பறிக்க சூழ்ச்சி செய்கிறார் என ராமதாஸ் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளார். அதில்,



அன்புமணி பொய் சொல்கிறார் ராமதாஸ்

என்னை சந்திக்க வந்ததாக அன்புமணி பொய் சொல்கிறார். தைலாபுரம் வீட்டுக்கு என்னை சந்திக்க அன்புணி வரவில்லை; நான் கதவை அடைக்கவுமில்லை. பொய்களையும் கட்டுக்கதைகளையும் தொண்டர்களிடத்தில் அன்புமணி பரப்பி வருகிறார்

அன்புமணி கட்சியை பறிக்க சூழ்ச்சி செய்கிறார்

பாமகவை பறிக்க அன்புமணி சூழ்ச்சி செய்கிறார். பாமகவில் உள்ளவர்களிடம் பணத்தை கொடுத்து எனக்கு எதிராக அன்புமணி செயல்பட தூண்டுகிறார். ஐயா, ஐயா என்று சொன்னவர்களை ராமதாஸ் என்று சொல்ல வைத்தது அன்புமணிதான். பேச்சுவார்த்தைக்கு நான் வரமறுப்பதாக அன்புமணி பொய் மூட்டைகளை அவிழ்த்துவிடுகிறார்.

பணம் கொடுத்து நிர்வாகிகளை வளைத்து விட்டார் அன்புமணி

பாமகவின் கிளை 34 அமைப்புகளின் நிர்வாகிகளை பணம் தந்து வளைத்துவிட்டார் அன்புமணி. பாமகவுக்கு மீண்டும் அங்கீகாரம் பெறும் நோக்கில்தான் தலைவராக பொறுப்பேற்றுள்ளேன்.

பணம் கொடுத்து சமூகவலைத ளங்களில் என்னை பற்றி தவறாக

எழுத சொல்கிறார். பாமகவுக்கு நான் தலைமை ஏற்கக் கூடாது என்கிறார் அன்புமணி.

பணம் கொடுத்து என்னை விமர்சிக்க சொல்கிறார்

எதிரிகள் கூட என்னை பற்றி இவ்வளவு கேவலமான விமர்சனங்களை வைத்ததில்லை. பொதுவெளியில் அன்புமணி தன்னை பற்றி விமர்சிக்காமல் நாடகம் போடுகிறார். ஊடகம் முன்பு மனக்குமுறலை கூறுவதன் மூலம் மன அழுத்தத்தில் இருந்து விடுபடுகிறேன். அன்புமணியை நல்ல பள்ளியில் படிக்க வைத்து எம். பி. ஆக்கி பொறுப்புகளை ஒப்படைத்தேன்.

கூட்டணி முடிவால் அன்புமணியுடன் பிரச்சினை


வேட்பாளர், கூட்டணியை நான்தான் முடிவு செய்வேன் என்றதால் அன்புமணி பிரச்சினை செய்கிறார். கட்சி நிர்வாகிகளுக்கு பணம் கொடுத்து, அவர்களது ஆதரவை பெற முயற்சிக்கிறார். நான்தான் வேட்பாளர்களை தேர்வு செய்வேன் என அன்புமணி கூறுவதுதான் பிரச்சனைக்கு காரணம்.

அன்புமணியிடம் கட்சியை தந்து டம்மியா இருக்கமுடியாது

அன்புமணியிடம் கட்சியை கொடுத்துவிட்டு நான் டம்மியாக தைலாபுரத்தில் இருக்க முடியாது. கட்சியின் வளர்ச்சிக்காக இதுவரை அன்புமணி எதையும் செய்யவில்லை. செயல் தலைவர் பொறுப்பை ஏற்று பிழைத்துக்கொள் என அன்புமணிக்கு ராமதாஸ் அறிவுரை வழங்கினார்.

# கட்டணமில்லா அறுபடைவீடு பயணம்: விண்ணப்பிக்க செப்.15 கடைசி நாள்

சென்னை, ஆக.08-



இந்து சமய அறநிலையத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: 2025-26ம் நிதியாண்டுக்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டப்பேரவை அறிவிப்பை நிறைவேற்றும் வகையில் முருகப் பெருமானின் அறு படை வீடுகளான திருப் பரங்குன்றம், திருச் செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர் சோலை ஆகியவற்றுக்கு மூத்த குடிமக்கள், ஒரே முறையாக சென்று தரிசனம் செய்யும் வகையில் கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் பக்தர் கள் இந்து மதத்தைச் சார்ந்தவராகவும், 60 வயதுக்கு மேல் 70 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண் டும். ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்கு மிகாமல் இருப்பதோடு, அதற்கான வருமானச் சான்றிதழை வட்டாட்சியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும். போதிய உடல் தகுதி உள்ளதற்கான மருத்துவச் சான்றுடன், ஆதார் நகல் இணைக்கப்பட வேண்டும். ஆன்மிகப் பயணத்து க்கான விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் நேரில் பெற்றோ அல்லது www.hrce.tn.gov.in என்ற இந்து சமய அறநிலையத் துறை இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்தோ விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் செப்.15 ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 2000 உணவு டெலிவரி ஊழியர்கள் இஸ்கூட்டர் வாங்க தலா ரூ.20,000 மானியம்: அரசாணை வெளியீடு

சென்னை, ஆக.08-

2000 உணவு டெலிவரி ஊழியர்களுக்கு இஸ்கூட்டர் வாங்க தலா ரூ.20,000 மானியம் வழங்க தமிழக அரசாணை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு இணையம் சார்ந்த தற்சார்புத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 2,000 இணையம் சார்ந்த சேவைப்பணி தொழிலாளர்களுக்கு புதிதாக இஸ்கூட்டர் வாகனம் வாங்கும் பொருட்டு தலா ரூ.20,000 மானியமாக வழங்கும் புதிய திட்டம் கடந்த மார்ச்சில் நடந்த சட்டப்பேரவை கூட்டத் தொடரில் நிதியமைச்சர் அறிவித்தார்.

இதை நிறைவேற்றும் வகையில் முதற்கட்டமாக 2000 உணவு டெலிவரி ஊழியர்களுக்கு தலா ரூ.20,000 மானியமாக வழங்க ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மானியம் பெற, தமிழ்நாடு இணையம் சார்ந்த தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறைகள் மற்றும் தேவையான ஆவணங்கள் குறித்த கூடுதல் தகவல்களை நல வாரியத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான tnuwwb.tn.gov.in காணலாம். ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியாதவர்கள், இசேவை மையங்கள் மூலமாக விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தின் மூலம் டெலிவரி ஊழியர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# உள் விசாரணைக் குழுவை எதிர்த்த நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் மனு தள்ளுபடி: உச்ச நீதிமன்றம் அதிரடி

புதுடெல்லி, ஆக.08-

வீட்டில் கட்டுக்கட்டாக பணம் கைப்பற்றப்பட்ட விவகாரத்தில், தன்னை பதவிநீக்கம் செய்ய பரிந்துரைத்த உள் விசாரணை குழுவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிபதி யஷ்வந்த் வர்மா தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் யஷ்வந்த் வர்மா. இவரது வீட்டில் கடந்த மார்ச் மாதம் திடீரென தீப்பற்றியது. அப்போது அவர் வீட்டில் இல்லை. தகவல் அறிந்து வந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் போலீஸார் வீட்டில் தீயை அணைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அப்போது ஒரு அறையில் பல மூட்டைகளில் கட்டுக்கட்டாக பணம் எரிந்து சாம்பலாகி கிடப்பது தெரியவந்தது.

இந்த ரூபாய் நோட்டுக்களுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்று நீதிபதி யஷ்வந்த் வர்மா மறுத்த நிலையில், அது குறித்து உண்மையை அறிய அப்போதைய இந்திய தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, குழு ஒன்றை அமைத்தார்.

மூன்று பேர் கொண்ட அந்த குழுவில் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஷீல் நாகு, இமாச்சலப் பிரதேச உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஜி.எஸ். சந்தவாலியா மற்றும் கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி அனு சிவராமன் ஆகியோர் இருந்தனர். இக்குழு தனது அறிக்கையை மே 3 அன்று இறுதி செய்தது.

இதையடுத்து, அப்போதைய தலைமை நீதிபதி கன்னா, நீதிபதி வர்மாவிடமிருந்து பெறப்பட்ட பதிலுடன் குழுவின் அறிக்கையையும் சேர்த்து குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமருக்கு கடிதம் எழுதினார். இதை எதிர்த்து நீதிபதி யஷ்வந்த் வர்மா உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீபங்கர் தத்தா மற்றும் ஏ.ஜி.மாசிஹ் அமர்வு, உள் விசாரணைக் குழுவின் அமைப்பும், அதைத் தொடர்ந்து வந்த விசாரணை நடைமுறையும் சட்டவிரோதமானது அல்ல என்று தெரிவித்தனர்.

மேலும், “பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு தலைமை நீதிபதி கடிதம் அனுப்பியது அரசியலமைப்பிற்கு விரோதமானது அல்ல என்று நாங்கள் கருதுகிறோம். எதிர்காலத்தில் தேவைப்பட்டால் நடவடிக்கைகளை நீங்கள் எடுப்பதற்கு நாங்கள் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளோம்” என்று கூறியது. இதனையடுத்து, உள் விசாரணை குழுவின் அறிக்கையை எதிர்த்து நீதிபதி யஷ்வந்த் வர்மா தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

# வணிக செயல்பாடுகளை எளிமைப்படுத்தி செலவுகளை குறைக்க சிறு, நடுத்தர வணிக உரிமையாளர்களுக்கு சாட்ஜிபிடி பயிற்சி

சென்னை, ஆக.08-

வணிக செயல்பாடுகளை எளிமைப்படுத்தி, செலவுகளை குறைக்க உதவும் வகையில், சிறு மற்றும் நடுத்தர வணிக உரிமையாளர்களுக்கு சாட்ஜிபிடி பயிற்சி வகுப்பு, சென்னையில் ஆக.9 ம் தேதி நடைபெறுகிறது.




சென்னை கிண்டியில் செயல்பட்டு வரும் தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில், சாட்ஜிபிடியைப் பயன்படுத்தி வணிக செயல்பாடுகளை எளிமைப்படுத்தவும், செலவுகளைக் குறைக்கவும் உதவும் வகையில், தொழில்முனைவோர் சிறு மற்றும் நடுத்தர வணிக உரிமையாளர்கள், ஸ்டார்ட் அப் நிறுவனர்கள் ஆகியோருக்கான ஒருநாள் சாட்ஜிபிடி பயிற்சி வகுப்பு வரும் 9ம் தேதி நடைபெற உள்ளது.

முக்கிய பயிற்சிகள்: இப்பயிற்சி வகுப்பில் சாட்ஜிபிடியைப் பயன்படுத்தி வணிக தேவைகளுக்கு பொருத்தமான ப்ராம்ப்ட்டுகளை எழுதுதல், இலக்குகளை நிர்ணயித்தல், மார்க்கெட்டிங், பிராண்டிங், சமூக ஊடக திட்டமிடல், பகுப்பாய்வு, வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையிலான கருப்பொருளை உருவாக்குதல், வாடிக்கையாளர்களுடன் உரையாடலை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு (ஏஐ) கருவிகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து கற்றுக் கொடுக்கப்படும்.

அதேபோல், பயிற்சியில் பங்கேற்கும் நபர்களுக்கு 100க்கும் மேற்பட்ட சாட்ஜிபிடி ப்ராம்ப்ட்டுகளுடன் கூடிய பிரத்யேகமின் புத்தகத்துடன், வழிகாட்டுதல்களை பெற வாட்ஸ்அப் சமூக அணுகலும் வழங்கப்படும். கூடுதல் விவரங்களை www.editn.in என்ற இணையதளத்தையும், 95437 73337 மற்றும் 93602 21280 ஆகிய செல்போன் எண்களையும் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். முன்பதிவு அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக பாணியில் அரசுப் பள்ளி மாணவிகள் சீருடையை மாற்றிய புதுச்சேரி கல்வித் துறை

புதுச்சேரி, ஆக.08-

புதுச்சேரி அரசு பள்ளிகளில் மாணவிகள் சீருடையில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. அதன்படி, சுடிதாருக்கு மேல் ஓவர்கோட் அணிய கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது. தமிழக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு சுடிதார் மீது ஓவர்கோட் அணியும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது. இதனை பின்பற்றி புதுச்சேரியிலும் சீருடையில் மாற்றம் கொண்டுவர கடந்த 2013ம் ஆண்டு கல்வித்துறை நடவடிக்கை எடுத்தது. ஆனால் அதற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் சமூக அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தால் சீருடை மாற்றம் கைவிடப்பட்டது.

அதே நேரத்தில் பெரும்பாலான தனியார் பள்ளிகளில் மாணவிகள் ஓவர்கோட் அணியும் முறை நடைமுறையில் உள்ளது. ஓவர்கோட் சீருடை மாணவிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும் என கருதப்படுகிறது. இந்த நிலையில் புதுச்சேரி கல்வித் துறை துணை இயக்குனர் கவுரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதில், “அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு சுடிதார் மேல் ஓவர்கோட் அணிய வேண்டும். இதற்கான வடிவமைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், கண்காணிப்பு அதிகாரிகள் பள்ளி தோறும் சென்று தலைமை ஆசிரியரை சந்தித்து வடிவமைப்பை காண்பித்து மாணவர்கள் ஓவர்கோட் தைக்க அறிவுறுத்த வேண்டும்” என உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படுகிறது. தற்போது மாணவிகள் ஓவர் கோட் அணிய தேவையான துணியும் வழங்கப்பட உள்ளது.” எனக் கூறப்பட்டுள்ளது.

# சிறப்பு எஸ்.ஐ கொலை வழக்கில் பிடிபட்ட நபர் என்கவுன்ட்டர் ஏன்? மாவட்ட எஸ்.பி விளக்கம்

உடுமலை, ஆக.08-

உடுமலையில் விசாரணைக்காக சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் படுகொலை சம்பவத்தில் தொடர்புடைய மணிகண்டன் போலீஸ் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட நிலையில் அது குறித்து மாவட்ட எஸ்.பி கிரிஸ் யாதவ் விளக்கம் அளித்துள்ளார்.

அவர் அளித்துள்ள விளக்கம் வருமாறு: கைது செய்யப்பட்ட மணிகண்டனை சம்பவம் நடந்த பகுதிக்கு அழைத்துச் சென்று விசாரிக்கப்பட்டது. அப்போது கொலைக்கு பயன்படுத்திய அதே அரிவாளை எடுத்து போலீஸாரை தாக்க முயன்றபோது தான் துப்பாக்கியால் சுட வேண்டிய சூழல் ஏற்பட்டது. அரிவாளை கீழே போடச் சொல்லி பலமுறை அறிவுறுத்தியும் மணிகண்டன் கேட்கவில்லை. 2 முறை துப்பாக்கியால் சுட்டதில் ஒரு குண்டு மணிகண்டன் மீது பாய்ந்து உயிரிழப்பு ஏற்ப்பட்டது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருப்பூர் மாவட்டம் உடுமலை தாராபுரம் சாலையில் உள்ள வாஞ்சிநாதன் நகரில் வசித்து வந்தவர் சண்முகவேல் (57). இவர், குடிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்தார். குடிமங்கலம் காவல் எல்லைக்குட்பட்ட சிக்கனூத்து கிராமத்தில் மடத்துக்குளம் தொகுதி அதிமுக எம்எல்ஏ மகேந்திரனுக்கு சொந்தமான தோட்டம் உள்ளது. அங்கு தங்கி வேலை பார்த்து வந்த மூர்த்தி (66) என்பவருக்கும் அவரது மகன்களுக்கும் அடிதடி ஏற்பட்டுள்ளது. இந்த தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல், கழுத்து அறுத்து படுகொலை செய்யப்பட்டார்.

இதில் தொடர்புடைய மூர்த்தி, அவரது மகன்கள் மணிகண்டன், தங்கப்பாண்டி ஆகியோர் தலைமறைவாகினர். இவர்களைப் பிடிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் தலைமையில் ஆறு தனிப்படைகள் அமைக்கப்பட்டு பல்வேறு இடங்களில் தேடிவந்தனர். இதற்கிடையே, மூர்த்தி மற்றும் தங்கப்பாண்டி ஆகிய இருவரும் திருப்பூர் போலீஸில் சரணடைந்தனர். புதன்கிழமை இரவு தனிப்படை போலீஸார் மணிகண்டனை கைது செய்தனர்.

மூவரிடமும் விடிய விடிய போலீசார் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பெற்றுள்ளனர். இன்று காலை 6 மணி அளவில் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பிப்பதற்காக மணிகண்டனை அழைத்துக் கொண்டு போலீஸார் சிக்கனூத்து அருகே உள்ள உப்பாறு ஓடையில் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது என்கவுன்ட்டரில் மணிகண்டன் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நிலையில், இது தொடர்பாக விளக்கமளித்துள்ளார் மாவட்ட எஸ்.பி. கிரிஸ் யாதவ்



# திருப்பூர் மாவட்டம் உடுமலையில் தமிழக முன்னாள் முதல்வர் தமிழின தலைவர் கலைஞரின் ஏழாம் ஆண்டு நினைவு தினம்

திருப்பூர், ஆக.08-

திருப்பூர் மாவட்டம் உடுமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குடிமங்கலம் ஒன்றியம் வடக்கு அணிகடவு, பெதப்பம்பட்டி நால்ரோடு, ஆகிய இடங்களில் தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ச.கிரி தலைமையில் அஞ்சலி செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் அவைத்தலைவர் அற்புதராஜ், மாவட்ட பிரதிநிதி உதயகுமார், மகளிர் அணி துணை அமைப்பாளர் உமா மகேஸ்வரி, இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன், பூபதி மற்றும் ஐடி வின், சார்பு அணி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

# திருப்பூர் கிழக்கு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞரின் 7ம் ஆண்டு நினைவு நாள்

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இல.பத்மநாபன் பங்கேற்பு

திருப்பூர், ஆக.08-

திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டுக்காக, தமிழ் மொழிக்காக, தமிழ் மக்களுக்காகவே தனது 14 வயதில் மக்கள் பணி தொடங்கி, 95 வயது வரையில் தன் உயிர் மூச்சு வரை வாழ்ந்திட்ட பெருமகன், திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் கலைஞர் அவர்கள் 07.08.2018 ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும், இன்றும் நம் ஊனோடும், உணர்வோடும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை



முன்னிட்டு திருப்பூர் கிழக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் முத்தமிழறிஞர், செம் மொழி காவலர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை உள்ள இடங்களில் திருவுருவச் சிலைக்கும், திருவுருவச் சிலை இல்லாத இடங்களில் அவரது திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்தனர்.

அதுசமயம் இந்நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒருங்கிணைந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற் குழு. பொதுக்குழு உறுப்பினர்கள். நகர கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள். பொறுப்பாளர்கள், அனைத்து உள் ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள். அமைப்பாளர்கள், துணைத் தலை வர்கள், துணைஅமைப்பாளர்கள். ஒன்றிய, நகர பகுதி, பேரூர், வட் டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பூரில் மீண்டும் ஒரு வரதட்சணை கொடுமை தற்கொலை

திருப்பூர், ஆக.08-

திருப்பூரில் வரதட்சணை கொடுமையால் ரிதன்யா தற்கொலை செய்து கொண்டது மிகவும் பரபரப்பாக பேசப்பட்டு வந்த நிலையில், தற்பொழுது திருப்பூர் செட்டிபாளையம் பகுதியில் உள்ள பிரீத்தி வரதட்சணை கொடுமையால் பெண் தூக்கிட்டு தற்கொலை, கணவர் குடும்பத்தாரை கைது செய்யாமல் பிரேதத்தை பெற மாட்டோம் என உறவினர்கள் திருப்பூர் மாநகர காவல் ஆணையரை முற்றுகையிட்டனர்.

திருப்பூர் பிரண்ட்ஸ் கார்டன் பகுதியைச் சேர்ந்த சுகந்தி என்பவரது மகள் பிரீத்தி என்பவரை ஈரோடு மாவட்டம் வீரப்பன் சத்திரம் பகுதியை சேர்ந்த சதீஷ்வர் என்பவருக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் தேதி திருமணம் செய்து கொடுத்துள்ளனர். திருமணத்தின் போது 120நகை, 25 லட்சம் பணம், 38 லட்சம் இன்னோவா கார் உள்ளிவற்றை கொடுத்த நிலையில் பெண்ணின் பூர்வீக சொத்து விற்பனை வகையில் 50 லட்சம் பணம் வருவதை அறிந்து அதனை கேட்டு கொடுமை படுத்திய நிலையில் 10



மாதத்தில் வரதட்சணை கொடுமை காரணமாக கணவர் வீட்டில் இருந்து வெளியேறி தாய் வீட்டிற்கு வந்துள்ளார். ஒரு மாதமாக மன உளைச்சலில் இருந்த பிரீத்தி நேற்று மாலை தாயார் வெளியே சென்ற போது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரது உடலை மீட்ட நல்லூர் போலீசார் உடற்கூறாய்வு சோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். குடும்பத்தார் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என திருப்பூர் மாநகர காவல் ஆணையர் ராஜேந்திரனை முற்றுகையிட்ட பெண்ணின் உறவினர்கள், பெண்ணின் கணவர் மற்றும் குடும்பத்தினர் மீது நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பிரேதத்தை பெற்றுக் கொள்வோம் என திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனாகத்தில் உறவினர்கள் தெரிவித்தனர். இதனால் அங்கு பரபரப்பு சூழ்நிலை நிலவுகிறது.

# 45 வயதுக்கு மேற்பட்ட ஆய்வாளர்கள், பெண் போலீசாருக்கு இரவுப்பணியில் இருந்து விலக்கு: போலீஸ் கமிஷனர் அருண் அதிரடி உத்தரவு,முதன்முறையாக சென்னை காவல்துறையில் அமல்

சென்னை, ஆக.08-

தமிழகத்தில் முதன்முறையாக சென்னை பெருநகர காவல்துறையில் 45 வயதுக்கு மேல் உள்ள பெண் இன்ஸ்பெக்டர்கள் முதல் பெண் காவலர்கள் வரை இரவு பணியில் இருந்து விலக்கு அளித்து போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவிட்டுள்ளார். சென்னை பெருநகர காவல் துறையில் பணியாற்றும் காவலர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை சுழற்சி முறையில் இரவு பணி வழங்கப்பட்டு வருகிறது. இதில் பெண் காவலர்கள் முதல் பெண் இன்ஸ்பெக்டர் வரையிலான போலீசார் பணியாற்றி வருகின்றனர்.

பெண் போலீசார் 45 வயதுக்கு மேல் குடும்ப சூழ்நிலை மற்றும் உடல் நிலையை கருத்தில் கொண்டு இரவு பணியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், சென்னை பெருநகர காவல்துறை கமிஷனராக அருண் பதவியேற்ற பிறகு பெண் போலீசாரின் கோரிக்கையை ஏற்று, கடந்த ஆண்டு பெண் சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கு இரவு பணியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால், தற்போது போலீஸ் கமிஷனர் அருண் புதிய உத்தரவாக சென்னை பெருநகர காவல்துறையில்



45 வயதுக்கு மேல் உள்ள பெண் இன்ஸ்பெக் டர்கள், பெண் உதவி ஆய்வாளர்கள், பெண் சிறப்பு உதவி ஆய்வாளர்கள், பெண் தலைமை காவலர்கள் அனைவரும் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப இரவு பணியில் இருந்து விலக்கு அளித்து உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை தொடர்ந்து, 45 வயதுக்கு மேற்பட்ட பெண் போலீசார் தங்களுக்கு இரவு பணியில் இருந்து விலக்கு வேண்டும் என்று மனு அளிப்போருக்கு சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் உதவி கமிஷனர்கள் கட்டாயம் விலக்கு அளிக்க வேண்டும் என்று போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவிட்டுள்ளார். இந்த நடைமுறையை மேல் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு காவல் துறையில் முதன்முறையாக சென்னை பெருநகர காவல் துறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. போலீஸ் கமிஷனரின் இந்த உத்தரவுக்கு பெருநகர காவல் துறையில் பணியாற்றும் 45 வயதுக்கு மேற்பட்ட பெண் போலீசார் நன்றி தெரிவித்துள்ளனர்.



# திருப்பூர் உயிரிழந்த உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு தமிழக முதல்வர் 1 கோடி நிவாரணம் அறிவிப்பு

## அமைச்சர் சாமிநாதன் ஆறுதல் தெரிவிப்பு

திருப்பூர், ஆக.08-

திருப்பூர் மாவட்டம் உடுமலை குடிமங்கலம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து தமிழக முதல்வர் ஒரு கோடி ரூபாய் நிவாரணம் அறிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள உதவி ஆய்வாளர் உடலை பார்வையிட்ட பின் அவரது மகன் லலித்குமாருக்கு அமைச்சர் சாமிநாதன் ஆறுதல் தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், முதல்வர் தற்போது 1 கோடி நிர்வாணம் அறிவித்துள்ளார்.

முழுமையான விசாரணை நடைபெற்று வருகிறது.



■ திருப்பூர் மாநகராட்சி 23 வது வார்டில் தேங்கிஉள்ள குப்பைகளை அகற்றவும் வீடுகளில் 5 நாளாக குப்பை வாங்காமல் இருப்பது குறித்து மாண்பு மிகு மேயர், மாவட்ட ஆட்சி தலைவர், மாநகராட்சி ஆணையாளர் கவனத்திற்கு எடுத்துசென்று உடனடியாக நடவடிக்கை எடுக்க, மாநகராட்சி மன்ற உறுப்பினர் துளசி மணி நடராஜன் வலியுறுத்தியுள்ளார்.

# வீட்டு இணைப்புக்கு ரூ.91,993 மின் கட்டணம்: அம்பத்தூரில் உரிமையாளர் அதிர்ச்சி

சென்னை, ஆக.08-

அம்பத்தூரில் ஒரு வீட்டுக்கு ரூ.91,993 மின் கட்டணம் வந்ததால் வீட்டு உரிமையாளர் அதிர்ச்சி அடைந்தார். இந்நிலையில் மீட்டர் ஆய்வு செய்யப்படும் என மின் வாரியம் தெரிவித்துள்ளது.




தமிழகத்தில், மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிப்படி, ஆண்டுதோறும் மின் கட்டண உயர்த்தப்படுகிறது. அதன்படி, இந்தாண்டு 3.16 சதவீதம் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், சென்னை அடுத்த அம்பத்தூரில் ஒரு வீட்டுக்கு ரூ.91,993 மின் கட்டணம் பதிவாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அம்பத்தூர் திருவல்லீஸ்வரர் நகரை சேர்ந்த நந்தகுமார் என்பவரின் வீட்டில் 2 மாதத்துக்கு சராசரியாக 450 யூனிட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, 2 மாதத்துக்கு ஒரு முறை ரூ.1,500 முதல் ரூ.2.000 வரை மின்கட்டணம் செலுத்தி வருகின்றார்.

இந்நிலையில், நந்தகுமார் வீட்டில் ஜூலை மாத கணக்கீட்டின் படி 8,370 யூனிட் மின்சாரம் பயன்படுத்தியதற்காக, ரூ.91,993 மின்கட்டணம் வந்துள்ளது. இதைப் பார்த்ததும் நந்தகுமாரும், அவரது குடும்பத்தினரும் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனடியாக, இது தொடர்பாக, சென்னை அண்ணாநகர் மேற்கில் உள்ள மின் வாரிய அலுவலக அதிகாரிகளிடம் அவர் புகார் கொடுத்தார். அதன் பேரில், விசாரணை நடத்தி தவறுக்கான காரணம் கண்டறியப்படும் என மின்வாரிய அதிகாரிகள் உறுதியளித்தனர். மேலும், மீட்டர் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், தவறு நடந்திருக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



# திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரிஷ் யாதவ் ஐபிஎஸ் உத்தரவின் பேரில் விதிகளை மீறி வாகன ஓட்டியவர்களுக்கு பல்லடம் போக்குவரத்து போலீசார் விழிப்புணர்வு

திருப்பூர், ஆக.08-

திருப்பூர் மாவட்டம் பல்லடம் திருச்சி கோவை தேசிய நெடுஞ்சாலையில் பல்லடம் போக்குவரத்து காவல் நிலைய போலீசார் விதிகளை மீறி வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய பல்லடம் போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளர் பார்த்திபன் தலைக்கவசம் அணியாமல் வந்த வாகன ஓட்டிகளுக்கு சிக்னலில் சாலை விபத்து குறித்து வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய பல்லடம் போக்குவரத்து போலீசார் ஹெல்மெட் அணியாமல் வந்தால் விபத்து நேரிடும் சாலை விதிகளை பின்பற்றுதல் வேண்டும் விதிகளை பின்பற்றாவிட்டால் விபத்துக்கள் நேரிடும் இன்று வாகன ஓட்டிகளுக்கு பல்லடம் போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளர் பார்த்திபன் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார் உடன் பல்லடம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அன்புராஜ் மற்றும் பல்லடம் போக்குவரத்து காவல் நிலைய போலீசார் பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது




# சென்னையில் தூய்மைப் பணியாளர்கள் 7வது நாளாக போராட்டம்: ராயபுரம், திரு.வி.க. நகரில் குப்பை தேக்கம்

சென்னை, ஆக.08-

பணி நிரந்தரம் கோரி ரிப்பன் மாளிகை முன்பு போராடி வரும் தூய்மைப் பணியாளர் தரப்புடன் அமைச்சர் கே.என்.நேரு நேற்று நடத்திய பேச்சுவார்த்தையில் தீர்வு கிடைக்காத நிலையில், 7வது நாளாக இன்றும் போராட்டம் தொடர்கிறது.

சென்னை மாநகராட்சியில் தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க .நகர் ஆகிய மண்டலங்கள் மற்றும் அம்பத்தூர், அண்ணாநகர் மண்ட லங்களில் சில வார்டுகள் தவிர மற்ற பகுதிகளில் தூய்மைப்பணி தனியாரிடம் விடப்பட்டுள்ளது. மேற்கூறிய 5 மண்டலங்களில் மாநகராட்சி நிரந்தரப்பணியாளர்கள் மற்றும் என்யூஎல்எம் திட்டத்தின் கீழ் ஒப்பந்தப் பணியாளர்கள் தூய்மைப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.


இப்பகுதிகளையும் தனியாரிடம் விட மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் வேலை இழப்பு, ஊதியக் குறைப்பு, பணி பாதுகாப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பதால் தனியாருக்கு விடக்கூடாது. தங்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என தூய்மைப் பணியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த ஆக.1ம் தேதி முதல் உழைப் போர் உரிமை இயக்கத்தைச் சேர்ந்த தூய்மைப் பணியாளர்கள், ‘தூய்மைப் பணியில் தனியாரை அனுமதிக்க கூடாது. பணி நிரந்தரம் செய்ய வேண்டும்’ என வலியுறுத்தி ரிப்பன் மாளிகை முன்பு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு, பணி புறக்கணிப்பும் செய்து வருகின்றனர்.

இதனால் ராயபுரம், மேயர் ஆர்.பிரியாவின் வார்டு இடம்பெற்றுள்ள திரு.வி.க.நகர் மண்டலம் ஆகியவற்றில் 6 நாட்களாக குப்பைகள் அகற்றப்படாததால், சாலைகளில் குப்பை குவிந்து துர்நாற்றம் வீசுகிறது.

இந்நிலையில், உழைப்போர் உரிமை இயக்க நிர்வாகிகளை அழைத்து, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா முன்னிலையில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, ‘அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துவிட்டு, மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறோம்’ என்று அமைச்சர் நேரு கூறியதாக உழைப்போர் உரிமை இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே, எங்கள் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தூய்மைப் பணியாளர்கள் அறிவித்துள்ளனர்.

# ‘விவசாயிகள் நலனுக்காக எந்த விலையும் கொடுக்கத் தயார்’ ட்ரம்பின் வரித் தாக்குதலுக்கு மோடி பதிலடி



புதுடெல்லி, ஆக.08-
“விவசாயிகளின் நலனே எங்களுக்கு முதன்மையான முன்னுரிமை. விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பால் விவசாயிகளின் நலன்களில் இந்தியா ஒருபோதும் சமரசம் செய்யாது. அதற்காக எந்த விலையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்” என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ரஷ்யாவிடமிருந்து தொடர்ந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதற்காக, இந்தியா மீது அமெரிக்கா 50 சதவீத வரியை விதித்துள்ளது. இந்த நடவடிக்கை குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு, பிரதமர் மோடி பதிலளித்துள்ளார்.

புதுடெல்லியில் நடந்த எம்.எஸ்.சுவாமிநாதன் நூற்றாண்டு சர்வதேச மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, “எங்களைப் பொறுத்தவரை, விவசாயிகளின் நலனே எங்களுக்கு முதன்மையான முன்னுரிமை. விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பால் விவசாயிகளின் நலன்களில் இந்தியா ஒருபோதும் சமரசம் செய்யாது. அதற்காக நாம் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பது எனக்குத் தெரியும். நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். இந்தியா அதற்குத் தயாராக உள்ளது.” என்றார்

இந்தியப் பொருட்களுக்கு மொத்தமாக 50 சதவீதம் வரி விதிக்கப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பிரதமர் மோடியின் இந்தப் பேச்சு அமைந்துள்ளது.


50% வரி: முதலில் இந்தியா மீது 25 சதவீத வரி விதிப்பு அமல்படுத்தப்பட்டது. இது ஆகஸ்ட் 7 ம் தேதியில் இருந்து அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதலை இந்தியா நிறுத்தாவிட்டால், கூடுதல் அபராதம் விதிக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரித்தார்.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா தொடர்ந்து கொள்முதல் செய்து வரும் நிலையில், இந்தியா மீது மேலும் 25 சதவீதம் கூடுதல் வரிகளை விதிக்கும் உத்தரவில் ட்ரம்ப் நேற்று கையெழுத்திட்டுள்ளார். இதன்மூலம், அமெரிக்க சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கான மொத்த வரி விதிப்பு 50 சதவீதமாக அதிகரித்துள்ளது.

‘அமெரிக்காவின் நடவடிக்கை ஏற்கக்கூடியதல்ல. இது நியாயமற்றது. தேச நலன்களை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும். நாட்டு மக்களின் எரிசக்தி தேவையை உறுதி செய்வதே அரசின் முக்கிய நோக்கம்’ என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, ரஷ்யாவிடம் இருந்து உரம், யுரேனியத்தை அமெரிக்கா தொடர்ந்து இறக்குமதி செய்து வருகிறது. இதுகுறித்து ட்ரம்ப்பிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு, ‘‘எனக்கு அதுபற்றி தெரியாது. இதை கவனத்தில் எடுத்துக் கொண்டு சரிபார்க்கிறேன்’’ என்றார்.

# ட்ரம்ப்பின் 50% வரி விதிப்பும், இந்தியா மீதான பொருளாதார தாக்கமும்



புதுடெல்லி, ஆக.08-
இந்தியப் பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதித்துள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப். இது இந்தியாவின் பொருளாதாரத்தில் தாக்கத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது. உலக பொருளாதார நிபுணர்கள் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, இந்திய பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார். இந்நிலையில், தனது எதிர்ப்பையும் மீறி ரஷ்யாவிடம் இருந்து தொடர்ந்து கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்து வருவதாக கூறி, நேற்று (ஆக.6) இந்தியாவுக்கு கூடுதலாக மேலும் 25 சதவீத வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார். இந்த கூடுதல் வரி வரும் 27ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது. அதே நேரத்தில் ஏற்கெனவே அறிவித்த 25 சதவீத வரி வியாழக்கிழமை முதல் அமலுக்கு வருகிறது.

இந்தியா டு அமெரிக்கா ஏற்றுமதி: இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருட்களில் 20 சதவீதம்தான் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆகிறது. இது ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதம் என தகவல். அமெரிக்காவுக்கு ஓராண்டில் ரூ.8,650 கோடி அளவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்கிறது. தற்போதைய வரி விதிப்பு நடவடிக்கையால் ரத்தினக் கற்கள், நகைகள், ஆடைகள், ஜவுளி மற்றும் ரசாயனங்கள் உள்ளிட்ட பொருட்களின் ஏற்றுமதி பாதிக்கக்கூடும்.

கடந்த 202324 நிதி ஆண்டில் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் ஒட்டுமொத்த சதவீதம்: அமெரிக்கா 18%, ஐக்கிய அரபு அமீரகம் 8%, நெதர்லாந்து 5%, சீனா 4%, சிங்கப்பூர், பிரிட்டன், சவுதி அரேபியா, வங்கதேசம் ஆகிய நாடுகளுக்கு தலா 3%, ஜெர்மனி மற்றும் இத்தாலிக்கு தலா 2%, மற்ற உலக நாடுகளுக்கு 49% என உள்ளது. இதை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறையின் தரவுகள் தெரிவித்துள்ளன.

உலக அளவில் இந்தியா பொருட்களை ஏற்றுமதி செய்து வருகின்ற காரணத்தால் ஏற்கெனவே அறிவித்த அமெரிக்க இறக்குமதி வரி விதிப்பு நடவடிக்கையால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு சற்று பின்னடைவு ஏற்படும் என பொருளாதார வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

உலக வங்கியின் (ஜிடிபி 2023) தரவுகளை வைத்து பார்க்கும்போது மற்ற உலக நாடுகளை காட்டிலும் ஏற்றுமதி சார்ந்த இந்தியாவின் பொருளாதாரம் சற்று குறைவாகவே உள்ளது. இந்த பட்டியலில் வியட்நாம் நாட்டின் பொருளாதாரம் ஏற்றுமதி சார்ந்து 87% என உள்ளது. தாய்லாந்து 65%, துருக்கி 32%, பிலிப்பைன்ஸ் 27%, இந்தியா மற்றும் இந்தோனேசியா தலா 22%, வங்கதேசம் 13% என உள்ளது.

இருப்பினும் மற்ற நாடுகளை காட்டிலும் இந்தியாவின் பொருளாதாரம் சில பிரிவுகளில் அமெரிக்காவை சார்ந்துள்ளது என பொருளாதார வல்லுநர்கள் கூறியுள்ளனர். இது குறித்து கடந்த 5ம் தேதி அன்று பொருளாதார நிபுணர் தன்வி குப்தா ஜெயின் கூறியதாவது, “அமெரிக்க வரி விதிப்பு நடவடிக்கையால் ரத்தினக் கற்கள், நகைகள், ஆடைகள், ஜவுளி மற்றும் ரசாயனங்கள் மாதிரியான தொழில் பிரிவுகளில் ஏற்றுமதி பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இந்த விவகாரத்தில் அரசின் ஆதரவு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது” என்றார்.

பங்குச்சந்தை முதலீட்டில் பாதிப்பு? இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா வரி விதித்துள்ள காரணத்தால் இந்திய பங்குச்சந்தை முதலீட்டில் பாதிப்பு ஏற்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இருந்தாலும் முதலீட்டாளர்களுக்கு பெரிய அளவில் இதனால் பாதிப்பு இருக்காது என கருதப்படுகிறது.

தற்போது இந்திய பொருட்கள் மீதுதான் அமெரிக்கா வரி விதித்துள்ளது. அதனால் ஐடி சேவை சார்ந்த முதலீடுகளில் பாதிப்பு ஏதும் இருக்க வாய்ப்பு இல்லை என முதலீட்டு ஆலோசகர் ரஜத் அகர்வால் கருதுகிறார். இருப்பினும் அமெரிக்க வரி விதிப்பு காரணமாக இந்திய ரூபாய் மதிப்பில் ஏற்படும் தாக்கம் பங்குச்சந்தையில் எதிரொலிக்க வாய்ப்புள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வரி விலக்கு? அமெரிக்காவுக்கு அதிக அளவில் இந்தியா மருந்துகளை ஏற்றுமதி செய்து வருகிறது. அதற்கு இந்த வரி விதிப்பில் விலக்கு இருக்க வாய்ப்பு இருப்பதாக பார்க்கப்படுகிறது.

ஸ்டீல் மற்றும் அலுமினியம் உள்ளிட்ட உலோக பொருட்களின் ஏற்றுமதிக்கு பிரத்யேக உத்தரவின் மூலம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த துறை சார்ந்த வணிக ஏற்றுமதியில் பாதிப்பு இருக்காது. இதேபோல பரஸ்பர வரி விதிப்பிலிருந்து செமிகண்டக்டர் மற்றும் மின்னணு பொருட்களுக்கு விலக்கு உள்ளது. அதனால் இந்தியாவில் பெரிய அளவில் உற்பத்தி பணியில் ஈடுபட்டுள்ள ஆப்பிள் நிறுவன ஏற்றுமதியில் இந்த வரி விதிப்பு காரணமாக பெரிய பாதிப்பு இருக்காது என தெரிகிறது.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையில் வர்த்தக உடன்படிக்கை ஏற்பட்டால் நிச்சயம் இந்த வரி விதிப்புக்கு தீர்வு கிடைக்கும் என வணிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# ஜம்மு காஷ்மீரில் சிஆர்பிஎப் வீரர்கள் சென்ற வாகனம் விபத்து: 3 பேர் பலி; பலர் காயம்




ஸ்ரீநகர், ஆக.08-
ஜம்மு காஷ்மீரின் உத்தம்பூர் மாவட்டத்தின் பசந்த்கர் பகுதியில் உள்ள காண்ட்வா அருகே சிஆர்பிஎப் வீரர்கள் சென்ற வாகனம் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 வீரர்கள் உயிரிழந்தனர், மேலும் 15 பேர் காயமடைந்தனர்.

இது தொடர்பாக பேசிய உத்தம்பூர் கூடுதல் எஸ்பி சந்தீப் பட், “இன்று காலை 10.30 மணியளவில் கட்வா பகுதியில், பசந்த்கர் பகுதியில் 187 வது பட்டாலியன் படைப்பிரிவை சேர்ந்த பங்கர் வாகனம் கவிழ்ந்தது. அப்போது மொத்தம் 23 சிஆர்பிஎப் வீரர்கள் அதில் இருந்தனர். வீரர்கள் பணியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நடந்தது

விபத்தைத் தொடர்ந்து, மீட்புக் குழுக்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணியை மேற்கொண்டு, காயமடைந்த அனைவரையும் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.” என்றார்.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சரும், உத்தம்பூர் மக்களவை உறுப்பினருமான ஜிதேந்திர சிங், “மீட்பு நடவடிக்கைகள் உடனடியாகத் தொடங்கப்பட்டுள்ளன. உள்ளூர் வாசிகள் உதவ முன்வந்துள்ளனர். சாத்தியமான அனைத்து உதவிகளும் உறுதி செய்யப்படுகின்றன” என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, “உதம்பூர் அருகே நடந்த விபத்தில் சிஆர்பிஎப் வீரர்களின் உயிரிழந்தது வருத்தமளிக்கிறது. தேசத்துக்கு அவர்கள் ஆற்றிய சிறந்த சேவையை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம்.” என்றார்.

## குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான அட்டவணை வெளியீடு

புதுடெல்லி, ஆக.08-
குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, “வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி ஆகஸ்ட் 21. மாநிலங்களவை செயலாளர்தான் தேர்தல் அதிகாரி. வேட்புமனுக்களை வேட்டாளர்கள், மாநிலங்களவை அறை எண் 28ல் தேர்தல் அதிகாரி அல்லது துணை தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்கலாம். பொது விடுமுறை இல்லாத நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடியும். இதற்கான வைப்புத் தொகை ரூ.15,000. வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஆகஸ்ட் 22ம் தேதி நடைபெறும். போட்டி இருந்தால் தேர்தல் செப்டம்பர் 9ம் தேதி நடைபெறும். வாக்காளர்கள் காலை 10 மணி முதல் 5 மணி வரை நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அறை எண் தி101ல் வாக்குகளை செலுத்தலாம்.’’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.பதிவாகும் வாக்குகள் அன்றைய தினமே எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். குடியரசு துணைத் தலைவராக பதவி வகித்த ஜெகதீப் தன்கர் கடந்த ஜூலை 21ம் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனையடுத்து அந்த பதவியிடம் காலியாக இருப்பதை கடந்த ஜூலை 22 வெளியிடப்பட்ட அறிவிப்பில் உள்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியது. இந்தச் சூழலில் தற்போது குடியரசு துணைத் தலைவருக்கான தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.


## வட்டி விகிதத்தில் மாற்றமில்லை: ரிசர்வ் வங்கி ஆளுநர் அறிவிப்பு

மும்பை, ஆக.08-
ரெப்போ வட்டி விகிதங்களில் மாற்றமில்லை என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இதுகுறித்து ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா கூறியதாவது: பருவ மழைப் பொழிவு மற்றும் நெருங்கி வரும் பண்டிகை காலம் பொருளாதாரத்துக்கு சாதகமாக இருந்தாலும் உலகளாவிய வர்த்தக சவால்கள் தொடர்ந்து நீடிக்கும் நிலை உள்ளது. நடுத்தர கால அளவில் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைகள் பிரகாசமான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.

2025ம் ஆண்டில் ரெப்போ வட்டி விகிதங்களில் 100 அடிப்படை புள்ளிகள் குறைக்கப்பட்ட நிலையில் தற்போது மாற்றமில்லாமல் 5.5% என்ற அளவில் வைத்திருக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. பணவீக்கத்தைப் பொருத்தவரையில் 4 சதவீதத்துக்கும் மேல் உயர வாய்ப்புள்ளது. அதேநேரம் 202526 நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மதிப்பீடு மாற்றமின்றி 6.5 சதவீதமாகவே நீடிக்கும். சவாலான வெளிப்புற காரணிகள் இருந்தபோதிலும், இந்தியப் பொருளாதாரம் ஸ்திரத் தன்மையுடன் நிலையான வளர்ச்சிப் பாதையில் பயணிக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# உடுமலை சிறப்பு எஸ்ஐ கொலையில் தொடர்புடைய நபர் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொலை





உடுமலை, ஆக.08-
உடுமலையில் விசாரணைக்காக சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் படுகொலை சம்பவத்தில் தொடர்புடைய மணிகண்டன் என்பவர் போலீஸ் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக போலீஸ் தரப்பில் வெளியிடப்பட்ட தகவல்கள்: திருப்பூர் மாவட்டம் உடுமலை தாராபுரம் சாலையில் உள்ள வாஞ்சிநாதன் நகரில் வசித்து வந்தவர் சண்முகவேல் (57). இவர், குடிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்தார். குடிமங்கலம் காவல் எல்லைக்குட்பட்ட சிக்கனூத்து கிராமத்தில் மடத்துக்குளம் தொகுதி அதிமுக எம்எல்ஏ மகேந்திரனுக்கு சொந்தமான தோட்டம் உள்ளது. அங்கு தங்கி வேலை பார்த்து வந்த மூர்த்தி (66) என்பவருக்கும் அவரது மகன்களுக்கும் அடிதடி ஏற்பட்டுள்ளது. இந்த தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல், கழுத்து அறுத்து படுகொலை செய்யப்பட்டார். இதில் தொடர்புடைய மூர்த்தி, அவரது மகன்கள் மணிகண்டன், தங்கப்பாண்டி ஆகியோர் தலைமறைவாகினர். இவர்களைப் பிடிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் தலைமையில் ஆறு தனிப்படைகள் அமைக்கப்பட்டு பல்வேறு இடங்களில் தேடிவந்தனர். இதற்கிடையே, மூர்த்தி மற்றும் தங்கப்பாண்டி ஆகிய இருவரும் திருப்பூர் போலீஸில் சரணடைந்தனர். புதன்கிழமை இரவு தனிப்படை போலீஸார் மணிகண்டனை கைது செய்தனர்.

மூவரிடமும் விடிய விடிய போலீசார் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பெற்றுள்ளனர். இன்று காலை 6 மணி அளவில் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பிப்பதற்காக மணிகண்டனை அழைத்துக் கொண்டு போலீஸார் சிக்கனூத்து அருகே உள்ள உப்பாறு ஓடையில் சோதனை மேற் கொண்டனர்.

அப்போது மறைவான இடத்தில் இருந்த அறிவாளை எடுத்த மணிகண்டன், உடன் சென்ற குடிமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் சரவணகுமாரை தாக்கினார். இதில் வலது கையில் சரவணகுமாருக்கு காயம் ஏற்பட்டது. இதனையடுத்து குடிமங்கலம் காவல் ஆய்வாளர் திருஞானசம்பந்தம் தனது துப்பாக்கியை எடுத்து மணிகண்டனை சுட்டுள்ளார். பின் தலையில் குண்டு பாய்ந்ததில் சம்பவ இடத்திலேயே மணிகண்டன் சுருண்டு விழுந்தார்.

பின்னர் காயமடைந்த உதவி ஆய்வாளர் சரவணகுமார் மற்றும் மணிகண்டனை மீட்டு போலீஸார் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு மணிகண்டன் உடலை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கெனவே உயிரிழந்ததாக தெரிவித்தனர். இதை அடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல போலீஸார் ஏற்பாடு செய்துள்ளனர். வலது கையில் காயம் ஏற்பட்ட சரவணகுமார் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக குடிமங்கலம் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்தி அரசாணை வெளியீடு




சென்னை: ஆக.8-
கோயில் பணியாளர்களுக்கு துறை நிலை ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணை விவரம்: கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் துறை நிலை ஓய்வூதியம் ரூ.4 ஆயிரத்தில் இருந்து ரூ.5 ஆயிரமாகவும், துறை நிலை குடும்ப ஓய்வூதியம் ரூ.2 ஆயிரத்தில் இருந்து, ரூ.2,500 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என 202526 சட்டப்பேரவை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக, ஓய்வு பெற்ற கோயில் பணியாளர்களுக்கான துறை நிலை மாத ஓய்வூதியத்தை ரூ.4 ஆயிரத்தில் இருந்து ரூ.5 ஆயிரமாக உயர்த்தி வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

இதேபோல, ஓய்வு பெற்ற கோயில் பணியாளர்களின் மறைவுக்கு பிறகு, அவர்களது நேரடி வாரிசுகளுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.2,500 ஆக உயர்த்தி வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கடற்கரை வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தில் 2028ம் ஆண்டு முதல் மெட்ரோ ரயில்களை இயக்க திட்டம்



சென்னை, ஆக.08-
கடற்கரை வேளச்சேரி பறக்கும் ரயில் வழித்தடத்தில், வரும் 2028ம் ஆண்டு முதல் மெட்ரோ ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. தெற்கு ரயில்வேயிடம் இருக்கும் சென்னை கடற்கரை வேளச்சேரி வழித்தடத்தை மெட்ரோ ரயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கும் திட்டத்துக்கு ரயில்வே வாரியம் கொள்கை ரீதியான ஒப்புதலை ஜூலை 31ம் தேதி வழங்கியது.

விரைவில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இதன் மூலமாக பறக்கும் ரயில் சேவையின் சொத்து, ரயில் இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். இதன் பிறகு இந்த வழித்தடம் முழுமையாக மெட்ரோ ரயில் கட்டமைப்புக்கு மாற்றப்படவுள்ளது. குறிப்பாக ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வசதிகள் போன்று ஏற்படுத்தப்பட உள்ளது.

இதுகுறித்து, மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: கடற்கரை வேளச்சேரி பறக்கும் ரயில் வழித்தடத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கும் பணி 2 மாதங்களுக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கிறோம். மெட்ரோ ரயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, இந்த வழித்தடம் அடியோடு மாற்றப்பட உள்ளது.

மெட்ரோ ரயில் என்ன கட்டமைப்பில் இயங்கி வருகிறதோ அதேபோல ரயில் நிலையங்கள், ரயில் இயக்கம், சிக்னல், தண்டவாளம், தொழில்நுட்பம், பாதுகாவலர் என அனைத்தும் அமையும். இதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. வழித்தடம் ஒப்படைக்கப்பட்ட முதல் 2 ஆண்டுகளுக்கு இந்த வழித்தடத்தில் பறக்கும் ரயில்களே இயக்கப்படும்.

கட்டமைப்புகள் முழுமையாக மாற்றப்பட்ட பின்பு அதாவது 2028ம் ஆண்டு முதல் இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில்களை இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், வேளச்சேரியில் உள்ள புறநகர் ரயில் பணிமனைக்கான இடம் மெட்ரோ ரயில்களை பராமரிப்பதற்கு ஏற்ப மாற்றப்பட உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000